[illegible]

தொகுதி 16 பகுதி 9

JL
R6ஐ211,N18GN
N26·16·9
ஜ10801

1418

Registered No. M. 2095.

ஓம்

22 MAR 1926

# ஞானோதயம்.

——(x)——

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 16 } 1926-௵ மார்ச்சு-மீ 11௳ { பகுதி 9.

## பொருளடக்கம்.

1. சமயங்களின் ஒற்றுமை
(பத்திராதிபர்மொழிபெயர்ப்பு) ...246
2. உலகைனருக்கு நாமளித்து தவவேண்டிய உபதேசங்கள்
P. R. சுந்தரராஜய்யர் ...253
3. ரக்ஷாபந்தம்—கோதண்டராமன் ...256
4. பகவத்கீதை—K. S. ராமஸ்வாமி அய்யர் ...262
5. நாரத பக்தி ஸூத்ரங்கள்—P. S. ராமசுப்பையர் ... (1)
6. திருந்துமன்—K. S. ராமசாமிய்யர் ...265
7. குறிப்புகளும் சமாசாரங்களும் ...267

சந்தா விபரம்:—
வருஷ சந்தா உள்நாடு ரூ 1—0—0, வெளிநாடு ரூ 1—8—0,
தனிப்பிரதி ரூ 0—2—0.

பத்திராதிபர்—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி.
தஞ்சாவூர் ஜில்லா.

பேரளம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 16 } 1926-௵ மார்ச்சு-௴ 11உ { பகுதி 9.


1. நித்தியமாய் நிர்மலமாய் நிஷ்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்காச்,
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த்
துரியநிறை சுடரா யெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்ற வொன்றைச் சுகாரம்பப்
பெருவெளியைச் சிந்தைசெய்வாம்.

2. அத்துவித வஸ்துவைச் சொற்பிரகா சத்தினை
யருமறைகண் முரசறையவே
அறிவினுக் கறிவாகி யானந்த மயமான
ஆதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம்மதம் பெறாச்
சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலம்ப வாலம்ப
சாந்தபத வ்யோமநிலையை

# சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

இப்பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 11உ வெளியாகி, அன்றையத்தினமே தபாலில் அனுப்பவேண்டிய நம் நேயர்களுக்கு, நேரில் எனங்குடி தபாலாபீஸில் போடப்படுகின்றபடியால், பத்திரிகை நம் நேயர்களுக்குச்சரிவரச்சேராவிட்டால், அதற்கு நாங்கள் காரணர்களல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. நாங்கள் சந்தாத்துகையை முன்பணமாகவே பெற்றுக் கொண்டு பத்திரிகையை அனுப்பி வருகிறோமாயினும், பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளத் தக்கவர்களென்று நம்பி சில கனவான்களுக்குப் பத்திரிகை அனுப்பியிருக்கிறோம். பிறகு அனுப்புவதாய் ஒப்புக்கொண்டு சில நண்பர் பத்திரிகையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விருவகை அபிமானிகளான நண்பர்களும் தயவு செய்து சந்தாத் துகையை கால தாமதம் செய்யாமல் உடனே அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

3. பிரம்மஞான ஸபை மெம்பர்களாயுள்ளவர்கள் நாளது வருஷத்திய சந்தா ரூ 4ம் இதுவரையில் கொடுக்காம விருந்தால் உடனே கொடுத்துவிடுவார்களென்று நம்புகிறோம். தாமதித்து அனுப்புவதால் மத்தியில் பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடுவார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

4. ஞானோதயம் 16வது தொகுதி ஆரம்பத்திலிருந்து சஞ்சிகை பெற்றுக்கொள்ளாத சில மெம்பர்களிருக்கிறார்கள். அவர்களுக்கு 1வது பகுதியிலிருந்து வேண்டியிருந்தால் பகுதி ஒன்றுக்கு அரையணாவீதம் சேர்த்து அனுப்பினால் பத்திரிகை அனுப்புகிறோம்.

5. நமது பத்திரிகை அதிகமாய்ப் பரவவேண்டுமென்ற உத்தேசத்துடன் சில நண்பர்கள் சிரத்தையெடுத்துக்கொண்டு உழைத்து வருகிறார்கள். அவர்கள் தயவுசெய்து இதுவரையில் சேர்ந்திருக்கிற சந்தாதாரர்களின் ஜாப்தாவும் சந்தா துகையும் அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

9. சென்ற 8வது சஞ்சிகை 242ம் பக்கம் 11வது வரியில் **"சின்னபின்னம் செய்வதற்காக வருகிறேனே தவிர"** என்று அச்சுப்பிழையில் தவறி விழுந்திருப்பதை எடுத்துவிட்டு வாசிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

2184
செ... 600

நித்ய நிர்மலச்சித்த நிஷ்ப்ரபஞ்சப் பொருளை
நிர்விஷய சுத்தமான
நிர்விகா ரத்தைத் தடத்தமாய் நின்
அருளிர் நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தி னின்றிலகு
திவ்ய தேசோ மயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பர மதான
பரதேவதையை யஞ்சலிசெய்குவாம்.

(தாயுமானவர்.)

# * சமயங்களின் ஒற்றுமை.

பலவிதங்களான பின்னபாவங்களுக்கு அதிக்கிரமித்துள்ள ஏகத்துவத்தை நாம் கிரஹிப்பதற்குத் தக்கவாறும், பிரகிருதி சாஸ்திரப் பரிஞானத்தாலும், மானிட ஜீவ்யத்தில் பல பல விபாகங்களாலும், சென்ற காலத்தினின்று கேட்டுவரும் சமாசாரங்களாலும், நிகழ்காலத்தில் காணப்படும் ஸம்பவங்களாலும், நமக்குப் புலப்படும் மகாவிஷயங்களைக்குறித்து, எனது ஸஹோதரர் இப்பொழுது உபன்னியஸித்தார். விருத்தியடைந்துவரும் இவ்வுலகில் இந்த ஏகத்வம் ஈசுவரசங்கற்பானுஸாரமாக இருக்கின், அது ஈசுவரனுடைய விபூதிகளும், சக்திகளும் வியக்தப்படுத்தும் ஏகத்வத்திற்கு ஹேதுவாக இராமல், வைஷம்ய காரணங்களான இந்த விபாகங்கள் ஏன் உண்டாகவேண்டுமென்பதாக உங்களில் சிலர் எண்ணலாம். நீருள்ள குளங்கள் எத்தனையிருக்கினும் ஒவ்வொன்றிலும் சூரியன் எவ்விதம் பூரணமாகப் பிரதிபிம்பித்துக்கொண்டிருக்கிறதோ, அவ்விதமே நமது இந்த பிரதியற்ப ஜீவிதத்திலும் பரமபுருஷனது தேஜஸ் பிரதிபிம்பிக்கின்றது. ஆனால் இந்த மானிடகோடியின் ஸமஷ்டி அனுபவத்தினின்

* பிரம்மவித்தியா மஹாஸபையின் ஜூபிலி மஹோத்ஸவ ஆரம்பதினத்தில் (24—12—1925.) டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்கள் செய்த ஆங்கில உபந்யாஸத்தின் சுருக்கம், பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.



றும், பலவிதங்களான பூதங்களிடத்து பரிணமத்தால் பலப்பட்டுவரும் பின்னத்துவங்களினின்றும் முடிவில் இந்த ஸஹஸ்ர முகங்களையுடைய ஈசுவரன் வெளிப்படுவார். ஒவ்வொன்றினிட்மும் வித்துரூபமாகவுள்ள இந்த அம்சம், மொத்தத்தில் மானிடகோடியில் விசுவரூபத்தை யடையும்.

மதங்கள் ஒன்றின்பின் ஒன்றாக ஸ்தாபிக்கப்பட்டு, பிரதி மதமும் உலகப் பொது மதத்திற்குக் கொஞ்சம் உதவிபுரிதல் எவ்வளவு அற்புத விஷயமென்று சற்று யோஜியுங்கள். சரித்திரங்களால் இவ்விஷயம் தெரியவரும். எல்லா மதங்களின் மூலதத்துவங்களைத் தெரிந்துகொள்ளின் உங்களுக்கே இவ்விஷயம் போதமாகும். அம்மூலதத்துவங்கள் அந்தந்தக் காலங்களில் பல்வேறுவிதங்களாய் போதிக்கப்படுவதாலேயே அவற்றி னுண்மை கிரம க்ரமமாய் வெளிப்படுத்தப்படுகின்றது.

மனம் பேதத்தையே கண்டுபிடிக்கும்; ஒரே செடியின் கண்ணுள்ள இரண்டு இலைகளிடத்தும் பேதங்களைக் கண்டுபிடிக்கக்கூடியது. அவ்வித மனதால் நமக்கு வேற்றுமை பாவமே கோசரமாகும். அம்மனமே காலகிரமத்தில் பரிபக்குவமாகவே, ஞானமுண்டாகி, அந்த ஞானத்தால் ஏகத்வத்தை யறியும். இந்த இருபதாம் நூற்றாண்டில் உலகில் மனம் பிரதானமாகிப் பரிபாலித்துவருகின்றது. ஆனதால் என் சகோதரர் சொன்னபடி, நாம் வேண்டுமென்றாலும், வேண்டாமெனினும், பரிணமப் பிரவாஹத்தில் ஏகத்வத்திற்கு அடித்துக் கொண்டுபோகப்படுகிறோம். மததர்மங்களெல்லாம் பாரமார்த்திக தத்துவங்களேயாயினும், அவை மனதின் துவாராவாகவே நமக்குத் தெரியவேண்டியதா யிருக்கின்றன. சூரிய ரசுமி முப்பட்டையாயுள்ள வளையில்பட்டு பின்னவர்ணங்களாக எவ்விதம் மாறுமோ, அவ்விதமே இந்த தத்துவங்கள் நமது மனதினிடமாக விழுந்து பின்னரூபங்களை யடையும். ஆனதால் இந்தப் பூரண தேஜஸின் உண்மையைத் தெரிந்துக்கொள்ளவேண்டின், இந்த பின்னத்வத்தின் மூலமாகவே தெரிந்துகொள்ளவேண்டும்.

ஆரிய ஜாதியின் வேதங்கள், வேதாந்தங்கள், கலைகள், இவைகளைப் பரிசோதித்துப் பார்க்கின், அக்காலத்தில் வியாஸபீடத்தைப் பெற்று அவதரித்த ஸ்ரீ ஜகத்குரு அந்த தாய் ஜாதியான ஆரிய மூல வர்க்கத்திற்கு அளித்த உண்மைகளாகக் காணப்படும். அவர் சுவேத தீபமென வேதங்களிலும் புராணங்களிலும் வர்ணிக்கப்பட்ட இடத்தில், அந்த தாய் ஜாதிக்கு ஆரியமத மூல தத்துவங்களை அளித்தார். அந்த ஜாதிக்குழந்தைகளான ஒவ்வொரு உபஜாதியும், கிரமக் கிரமமாக வளர்ந்து, தாய்வீட்டைவிட்டு ஒவ்வொரு தேசத்திற்கும் சென்றபொழுது, அந்தந்த உப ஜாதிக்கு அப்பரம உண்மையில் ஒவ்வொரு விசேஷ அம்சத்திற்கு அதிக முக்கியத்தை அளித்து, அந்த உப ஜாதியில் தான் அவலம்பித்து பின்னர் அதை உலகில் பிரசாரம் செய்யும்படி அவர் நியமித்தார். அந்தந்த உபஜாதிகளின் மதங்கள் ஒவ்வொன்றையும் பிடித்துப் பரீக்ஷித்துப் பார்க்கின், அதனிடம் ஏதோ ஒரு விசேஷ லக்ஷணமிருந்து, அது அந்த மதபுஷ்பத்திற்குப் பிரத்தியேக வர்ண கெந்தங்களை உலகில் விதைப்பதற்குக் கொடுத்ததாகப் புலப்படும். சுவேத தீபத்தினின்று வெளிப்பட்டுச் சென்ற உப ஜாதிகளில் ஒன்று எகிப்து தேசத்திற்குச் சென்று, அங்கு ஆரிய ஜாதி லக்ஷணங்களையும் விக்ஞானத்தையும் ஸ்தாபித்தது. அப்பொழுது எகிப்து தேசத்தில் ஸத்திய யுகம். அப்பொழுது அந்த தேசத்தின் ஞானம் பிரசித்தியடைந்திருந்தது. தேச தேசங்களினின்று புத்திமான்கள் அந்த தேசத்தில் அக்காலத்திய பிரசித்த சாஸ்திர விக்ஞான சம்பாத்தியத்திற்காகச் சென்றுகொண்டிருந்தார்களென்ன சரித்திரங்களால் தெரிய வருகின்றது. பின்னர், வெளிப்பட்ட உபஜாதி பாரசீகதேசம் சென்றது. அங்கு ஜரதுஷ்டராவென்ற பெயரால் அவதரித்து, மற்றொரு தர்மத்தைப் பிரதிபாதித்து நூதன மதத்தை ஸ்தாபித்தார். தாய் மதத்தில், ஈசுவரன் எங்கும் நிறைந்தவர் என்றும் ஆனதால் மானிடர்களெல்லாம் ஒன்றென்றும் சொல்லியபடியே, எகிப்தில் ஞானமும், சமாதானமும் முக்கிய தத்து-



வங்களாகச் சொல்லப்பட்டன. அவ்விதமே பாரசீகத்தில் ஜோரோஷ்டரவெனும் மதத்தில், ஈசுவரனின் மற்றொரு தத்துவமான பரிசுத்தத்திற்கு, விசேஷமளிக்கப்பட்டு, அது அந்த மதமூலதர்மமாகவும், அக்கினி அதனுடைய வெளிச்சின்னமாகவும் கொள்ளப்பட்டது. பின்னர் மற்றொரு உபஜாதி இன்னும் மேற்குதிசை சென்று, பிராசீன கிரீஸ் தேசத்தில் சிறிதுகாலம் நின்று பின்னர் ஐரோப்பா கண்டப் பிரதேசங்களிலெல்லாம் பரவிப் பின்னர் வடபாகங்களில் வியாபித்தது. அந்த உபஜாதியில், சௌந்தரியம் ஈசுவனது முக்கிய தர்மமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, உலகப்பொதுமதம் தரிப்பதற்குக் கோர்க்கப்பட்ட மாலைக்கு மற்றொரு மணி காணிக்கையாக அளிக்கப்பட்டது. அப்போதைய கிரீஸ் தேசத்தின் வெளி வாழ்க்கையில் அந்த சௌந்தரியம் ஊன்றிக்கொண்டுவிட்டது. இன்னும் ஐரோப்பா கண்டத்தில் பிராசீன கிரீஸ் தேசத்து பாஷா சௌந்தரியம், சித்திரகலா சௌந்தரியம் இவைகள் சாக்ஷிகளாக விருக்கின்றன. இம்மதங்கள் உலகில் வியாபித்துக்கொண்டிருக்கையில் புத்த பகவான் அவதரித்தார். அவர் ஸத்பிரவர்த்திக்கு அமிர்தத்வத்தையளித்தார். மானிடர்கள் ஈசுவரனை மறந்துபோனாலும் ஸத்பிரவர்த்தனமே அவருக்கு பிரதிநிதியாக இவ்வுலகில் இருக்கும்படி செய்தார். புத்த பகவான் இந்தப் பவித்திரமான பரதக்கண்டத்தில் தனது தொழிலை நிறைவேற்றிய பின்னர், அவரது ஸ்தானத்தில் மற்றொருவர் ஜகத்குருவாக வந்தார். அவர் முதல்முதல், பிரதி மனிதனின் ஹிருதயத்திலும் அமர்ந்துள்ள பரமேசுவர ரூபமான ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தார். அந்த ஸ்ரீ கிருஷ்ணனின் வேணுகானம், பிரேமை தத்துவங்களையும், ஆனந்த தத்துவங்களையும் கானம் செய்து கொண்டிருக்க, அந்த கானத்தைக் கேட்டு ஆனந்திப்பதற்குப் பசுக்கள் அவரைச் சுற்றிலும் கூடிக்கொண்டிருந்தனவென்பதாகவும், செடிகள் தங்கள் தலைகளை வளைத்துக்கொண்டிருந்ததாகவும் சொல்வார்கள். இன்றைக்கும் அந்த வேணுநாதம் அப்புண்ணிய தேசப் பிராந்தியங்களில் வியாபிக்கிறது. அப்பரம

குருவினிடம் பக்தியோடு நிரப்பிக்கொண்டேயிருக்கின்றது. பின்னர் மேற்கில் பாலஸ்தீன் நாட்டில் ஒரு யூத ஜாதியில் சரீரத்தை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவெனும் பெயரால் அவதரித்தார். மேற்கு தேசங்களின் ஞானத்தை மேற்கு தேசங்களுக்கு அளிப்பதற்கு அவர் அவதரித்தார். குடும்பத்தின்பேரில் கவலை வைப்பதற்கு பதிலாக, மனிதன் ஸ்வசக்தியின்பேரில் கவலை வைத்து வெளிப்படையான பலத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பதாகவும், எல்லோரையும்விட உத்தமமானவன் லோகோபகாரம் செய்பவனென்றும் அவர் போதித்தார். அவ்வித லோகோபகாரம் செய்வதற்கு பலம் ஸம்பாதிக்கவேண்டும். ஒருவன் விசேஷமாயுள்ள ஒரு கைங்கரியம் செய்யவேண்டுமாயின், அவன் முன்னடி தனது சக்திகளை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ மதத்தால் உள்ள பிரயோஜனங்களில் இது ஒன்று. மேலும், கிறிஸ்து தனது அனுஷ்டானத்தால் உபதேசித்துள்ளதும், இன்றைக்கும் இந்த லௌகீகப் பிரபஞ்சத்தில் ஆமோதிக்கப்பட்டு வருவதுமாயுள்ள மஹத்தான தத்துவம் மற்றொன்றுளது. அது யாதெனின், அவர் தனவானாகிலும், நமக்காக—அதாவது அவர் ஏழையாகி நம்மை தனவான்களாகச் செய்வதற்கு—அவர் ஏழையானார். ஆனதால், இன்று ஐரோப்பா கண்டமெல்லாம், பூர்வம் பரதக்கண்டத்தில் வைசிய தர்மமாக ஏற்படுத்தப்பட்ட தர்மம் வியாபிக்கவேண்டியிருக்கிறது. தனவான் தனது தனத்தை—அது ஞானதனமாகினும், திரவிய தனமாகினும் சரியே—இதரர்களுக்காகவே ஒழிய, தன் சொந்தத்திற்கு வைத்துக்கொள்ளப் படாது. தனவான், தன்னிடமுள்ள தனம் உலகத்தினுடையதென்றும், தான் அதின் பரிபாலகன் (தர்மகர்த்தா) என்றும் அறிந்து, இப்பரிபாலன தர்மத்தைத்தெளிவோடு கற்கவேண்டும். இது வைசிய தர்மம். இந்த தர்மம் இப்பொழுது கிறிஸ்தவ தேசங்களில் மெள்ள மெள்ள தலையெடுத்து வருகின்றது.

ஒன்றன்பின் ஒன்றாய் கிரமக் கிரமமாக இவ்விதம் நமக்களிக்கப்பட்ட இந்த சத்யங்களைப் பார்ப்போமாகில், ஈசு-



வரனது லக்ஷணங்களெல்லாம் ஒரே தடவையாக ஒருவனிடம் எப்பொழுதும் விகாசிக்கப்படாவென அறிவோமாகில், பிரதிமதத்திலும் போதிக்கப்படும் உண்மைகள் கொஞ்சகாலங்கழிந்த பின்னர், உலகில் எல்லோரும் கைக்கொள்ளவேண்டியதற்காக, அந்தந்தமதங்களில் வெவ்வேறாக போதிக்கப்பட்டனவென்பதாக கிரஹிக்கலாம். விசேஷலக்ஷணமுள்ள பிரதிமதத்தாலும், ஏதோ ஒரு பிரயோஜனமிருக்கின்றது. அம் மதங்களெல்லாம் உலகப்பொதுமதத்திற்கு ஸஹாயம் செய்கின்றன. பிறமதமொன்றைப் பிரேமித்து கௌரவிக்கக் கற்றுக்கொள்ளின், பின்னவர்ணங்களைத் தெரிவிப்பதில் ஐக்கியமாகும் வண்ணம் பின்னமதங்கள் அந்த சுத்தத்துவத்தில் ஐக்கியமாக்கக்கூடிய பரிபூரண அவஸ்தையை அறியக்கடவோம். உலகப்பொது மதத்தின் கருத்திதுவே.

மேலும் நாம் இதற்குப் பூர்வஜன்மங்களில் இதரமதங்களில் ஜனித்து அவைகளை அவலம்பித்து, அவற்றால் கற்றுக்கொள்ளக்கூடிய குணபாடங்களைக் கற்றுக்கொண்டு இருந்தோமென்பதாகவும், அந்த ஜன்மங்களில் கற்காமல் தவறியதைப் பின்னர் கற்றுக்கொண்டு வருகிறோமெனவும், கிரஹித்தமாத்திரத்தில், பிரேமையும் ஸ்வானுபூதியுமல்லாமல், கேவலம் அபராஞானத்தை மாத்திரமே உடைய மதங்களாலுண்டாகும் ஹிருதய சுஷ்கத்தை விட்டு, விசாலஹிருதயமுள்ளவர்களாவோம். கிரமமாக மதங்களெல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து, பிரதிமதத்தையும் ஸமானமாகக்கௌரவித்து, பிரதி மதஸ்தரோடும் கலந்து ஈசுவரபூஜைசெய்து, பிரதி மதஸ்தனிடமுமிருந்து தெரிந்துகொண்டு, எல்லோரும் ஈசுவரனது சந்ததியேயென்று எல்லோரையும் ஸமமாகப் பிரேமித்துக்கௌரவிக்கக் கூடியஸ்திதிக்கு வருகிறோம்.

இவ்வுலகப் பொதுமதம் இப்போதுள்ள மதங்களை நாசஞ்செய்யா. அவைகளிடத்துள்ள லோபங்களை அது பூர்த்திசெய்யும். அதையே ஸர்வலோக சகோதரத்வ மதமென்றும் ஒரு சமயம் வழங்கிக்கொண்டிருந்தோம். ஸர்வ

ஸகோதரத்வம் நமக்கு வேண்டாமெனினும் நம்மேல் விழு கின்றது. ஒரு உபன்னியாசகருடைய பேச்சு இவ்வளவு ஜனம் கேட்பவர்களுக்கு இவ்வளவு தூரத்திற்கு கேட்கும் படி செய்தலைப் பார்க்கிறோமன்றோ! இவ்விதமே உலகில் பரஸ்பர ஸம்பந்தமுள்ளதாக்கங்கள் விசேஷமாய் பலப்பட்டுவரு கின்றன. இதனால் ஒருவனுக்குத் தெரிந்த விஷயம் அவன் எல்லோருக்கும் தெரிவிக்காமல்இருக்கமுடியாது. சுற்றியுள்ள வர்களுக்கெல்லாம் அது தாக்கியேசெல்லும். எவருக்கு எந்த விஷயத்தைக்குறித்துத் தெரிந்தாலும், அதை அவன் எல் லோருக்கும் தெரிவிக்கவேண்டும். ஒருவனுக்குத்தெரிந்த மாத்திரத்தால் மற்றொருவன் நலத்தையடைய வேண்டியிருக் கிறது. நமது சரீரங்கள் எவ்வளவு பின்னங்களாகக் காணப் படினும், நாமெல்லோரும் ஒன்றென்பதாக கிரஹிக்கவேண் டியிருக்கிறது. சரீரங்கள் பின்னங்களாயினும், பிரதி சரீர மும் அந்த ஈசுவரனுடைய ஆலயமாக விருக்கின்றது. ஈசு வரனது தேஜஸ் நமது சரீரத்தினிடமாக விருக்கின்றது. எல் லோருடைய மனமும் ஒன்றேயென்பதாக நாம் தெரிந்து கொள்ளவேண்டிய ஞானம் ஏற்படவேண்டும். இந்த விஷய த்தை நாம் தெரிந்துகொள்ளின், அதனால் மற்றொரு விஷயம் தெரியவரும். நம்மில் ஒவ்வொருவனும் ஈசுவரனாகும் கார ணத்தால், இந்த ஈசுவரலக்ஷணம் வியக்தமாவதற்குத்தான் பிரத்யேகமாக இவ்வுலகில் செய்யவேண்டிய காரியமொன்று ஏற்பட்டிருக்கும். இவ்வுலகில் எவர் எத்தொழிலை அவலம் பிக்கினும், அது ஸம்பந்தமான எக்காரியத்தைச் செய்யினும், அக்காரியம் ஈசுவரனே அவானுடைய சரீரத்துவாராசெய்கி ருர். நமது ஸ்தூல, சூக்ஷ்மசரீரங்களை எவ்வளவு பக்குவப் படுத்திக்கொள்கிறோமோ அவ்வளவு அவை அப்பரம புருஷ னுக்கு உபயோககரமுள்ளதாயிருக்கும். நாமிந்தவேலைகளைச் செய்கிறோமென்பதை மறந்து, ஸர்வசங்கற்பனும், ஸர்வகர்த் தாவுமான ஸர்வேசுவரனே நமது துவாரா அவ்வேலைகளைச் செய்கிருர் என்பதாகத் தெரிந்துகொள்வதற்குத் தக்கவாறு நமது ஜீவிதம் மிகவும் பிரயோஜனகர முள்ளதாகும். இவ்



விஷயங்களையெல்லாம் கிரஹிப்போமாயின் நமக்கிவ்வுலகில் சாத்தியமாகாதது இராது. ஒரு மனிதனின் இச்சையைவிட ஈசுவரனது (ஸமஷ்டி) இச்சை பலவந்தமுள்ளது. அந்த ஈசு வரேச்சை நிறைவேறவேண்டும். அந்த இச்சையே பரிணா மம். அப்பரிணாமரதத்திற்கு நாம் ஸஹாயம்செய்யினும், செய்யாதிருக்கினும், அது முன்செல்லவேண்டியதே. ஆனால் அந்தரதத்தை நடத்துவதற்கு உடன்படும் பிரதிமனிதனும் ஈசுவரனுக்கு ஸஹகாரியாவான். நரனுக்கு அதைவிட இச் சிக்கத்தகுந்த பாக்கியம் வேறு எதுதான் இருக்கிறது?

ஓம். தத். ஸத்.

---

# உலகினருக்கு நாமளித்துதவவேண்டிய உபதேசஙகள்.

(232-ம் பக்கத் தொடர்ச்சி.

இனி முடிவில் அகந்தையாங் குணமும் இவ்வாறே நமக்குப் பூரண ஊக்கத்துடன் கூடிய வாழ்வின் பெருக்கை யளிக்கின்றது. மற்றவரிடமில்லாததோர் குணம் ஒன்றை நாமடைந்திருக்கிறோம் என்பதும், நமது தீர்மானம் யோச னைகளிவை மற்றவருடையனவைகளைக் காட்டிலும் ஆழ்ந்தது முண்மை கொண்டதுமாம் என்பதும், மற்றவர்களறியாதபடி நம்மிடம் மஹிமையும் வீரியமும் தக்கியிருப்பது நமக்கு ரகசியமாய்த் தெரிகின்றது என்பதும், ஆகிய இத் தன்மைய வான உணர்ச்சிகள் நமக்கு வாழ்வில் உத்ஸாஹத்தை ஈந்து வந்தனவன்றோ! ஏனெனில் சாமானியரான பேதை ஜனங்க ளைவிட நாம் வேறுபட்டுயர்ந்த வழியில் ஜீவித்துவருகிறோ மெனு ஞாபகம் நம்மிடம் தங்கியது. ஆயினும் சில சமயங்க ளில் இதன் பயனாய் நமக்கு அவமானமும் இருதய வாட் டமுமே விளைந்தன. ஏனெனில் நமதுயர்குணங்களையெல்லாம்

மதித்துப் போற்றாமல் உலகமும் வாழ்வும் நம்மை யலக்ஷியமே செய்துவந்தன. எவ்விதமெனில் நம்முடைய விதியானது பிரதிகூலமாகி நமக்கு அநீதியையுந் துன்பத்தையுமே யளித்துவந்தது. இதனால் நம்மை நாம் வீண்பெருமையால் அளவுக்கு மிஞ்சிய மதிப்பிற்கிலக்காக்கி மோசம் போனேமெனு முணர்ச்சி நெஞ்சினிலோர் புரத்திலுதித்து அகலாது நிற்கின்றது. இங்கு யாது ரஹஸியமென ஓர்ந்து பார்ப்போமாயின் நமது சிறிய அகந்தையினும் பன்மடங் குயர்ந்ததோர்ப் பேரகந்தையொன்று நமது அகந்தையை யெதிர்த்து, இதனைத் தலைகுனிந்து நாணிவிடச் செய்கின்றது என்பதை நாமறிந்துகொள்வோம். அப்படியே நமது யோசனையினு முயர்ந்ததோர் யோசனை நம்முடையதைத் தலையெடுக்கவிடா தகலச்செய்கின்றது. அவ்வாறே நம்முடையதினும் மேம்பட்டதோர் இச்சையானது நமதிச்சையொடு பொருந்தி, நாமிதுகாறுமிகழ்ந்துவந்த வன்னியர்களது இச்சைகளின் மட்டுக்கடக்கி நிறுத்தி இவ்வுலகினருக்கேற்ற பலாபலன்களுக்கே அதையும் உரியதுவாக்கி விடுகின்றது. (1) இப் பேரகந்தை, பெரியவிச்சை, பெரிய யோசனை யென்பன எல்லாம் இவ்வகில வுலகத்திற்கும் நற்றுணையாய் வாய்த்த நண்பனும் பெருமானேயாகும்.

இனி மேலேகூறிப்போந்த வனுபவங்கட்குப் பின்னர் ஈகையால் தம்மைக்கண்டு தெளிந்துகொள்ளும்படி அவனை நம்மைத் தூண்டிவருகிறான். இஃது எவ்வாறு ஏற்படுகின்றதென்பதை யுற்றுநோக்குவாம். நமக்கு ஏவலாய்த் தொண்டு புரிந்துவரும் அடிமை யல்லது மிருக மொன்றினிடம் நாம் சிறிது கருணையுடைக் கவனஞ் செலுத்தி, அது தாங்குமளவிற்கு மேற்படாத சுமை யதற்கேற்படும்படி செய்கிறோம். முன்போ லல்லாது இப்பொழுது அம்மிருகம் நமக்குழைத்து முடிக்கவேண்டிய வேலையைமட்டுமே நாம் எண்ணிவாராமல் இப்பொழுது அதன் நிலைமைக் கிரங்கி அதற்குங் கொஞ்ச

(1) ஆசைவெள்ளங் கவர்ந்துகொண் டிழுப்பதனை
மீட்டி மீட்டிப் பதைக்கின்றேன் பாவியேனே.

(தாயுமானவர்.)



மதிகமாகவே அன்னபானாதிக ளீந்துவர வுத்தேசிக்கிறோம். இச்சமயங்களில் நாம் அவசியமாய்ச் செய்துவரக் கடமைப்பட்டிருப்பதற்குச் சற்றதிகமாகவே அம்மிருகத்திற்கு உதவிபுரியத் துணிகிறோம். மிகவற்பச் செயலாகிய இதிலும், கடவுள் தனது அன்பெனுஞ் சோதியின்றாங் கிரணமொன்றைவீசி யிதைப் பவித்திரமாக்கி அதில் முன்னில்லாத அற்புத அம்சமொன்றை ஏற்படுத்தி விடுகிறான் எனு முண்மையை நாமுணருந் திறனுடையவர்க ளல்லமன்றோ!

நமக்குச் சமானர்கள், பெற்றோர், புருடன் அல்லது மனைவி, குழந்தைகள் அல்லது நண்பன், இவர்களுக்கு நாளுக்கு நாள் அதிகமதிகமாகக் கொடைகள் அளிக்கு மியற்கையை யடைகிறோம். பூர்வ ஜன்மங்களில் இவற்றையும் மனதில்லாமலே யற்பணஞ் செய்துவந்தோமாயினும், பிற்காலங்களில் நாம் செய்து தீரவேண்டிய கடமைகளே யிவையென்றெண்ணியும், இப்பால் அவ்வித முபகரித்துவருவதில் நமக்கு ஆனந்தமே யுண்டாவதாலும், நாம் அவ்வாறு காலங்கழிக்க வாரம்பித்து விடுகிறோம். முன்னாட்களிற் போலல்லாது இப்போது நமதென நாம் பொருட்களைக் கைக்கொள்ளாமல், நம்முடையதையும், பிறருடன் பங்கிட்டுக்கொள்ளுதலே நமது முக்கியமான சீலமாகி வருகின்றது. இங்கும், நாமிவ்வாறு 'நாம் நாம் எனு' மாயப்பிசாசை யடித்துத் துறத்தி பிறரது சுகலாபத்தைக் கருதும்வேளையில் அப்பேரன்பனே தனது பூரணவன்பின் வடிவமாங்கனவுகளை நமதியற்கையினுட் கலந்து பிரகாசிப்பிக்கிறான் என்பதை நாமறியுந் தரமன்று. (1)

P. R. சுந்தரராஜையர்.

(1) உறையுணர் விறந்துதம்மை யுணர்பவ ருணர்வனூடே,
கறையிலா வின்பவெள்ளங் காட்டிடுமுகிலே மாறாப்
பரையெனுங் கிரணஞ்சூழ்ந்த பானுவே நின்னைப்பற்றித்
துரையிலா நீர்போற்சித்தந் தெளிவனோ சிறியனேனே!

(தாயுமானவர்.)

# * ரக்ஷாபந்தம்.

கிரஹசேஷ்டைகளை நிவர்த்திப்பதற்காக உலகில் சிலர் ரக்ஷையைக்கட்டிக்கொள்ளும் வழக்கமுண்டு. ஏகதேசம் வெள்ளி அல்லது தங்கத்தினால் தாயத்துக்கள்செய்து, அதில் தாமிரத்தகட்டிலோ அல்லது தங்கத்தகட்டிலோ மூலாக்ஷரயுக்தமான யந்திரங்களை எழுதி அதற்குள் வைத்து, அந்த தாயத்துக்களுக்கு சில தினங்கள் பூஜைசெய்து, அவற்றில் சக்தியையேற்றி அவ்வித தாயத்துக்கள் உடலில் தரித்தல் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே. இவ்வித தாயத்திற்கு ரக்ஷையெனப்பெயர்.

ரக்ஷைகளிலெல்லாம் ஏதோ ஒரு தேவதையின் மந்திரத்தை உபயோகிப்பார்கள். மந்திரம், முத்திரை, சின்னம் என்று மூன்று வஸ்துக்கள் ஜதையாக வேலைசெய்யும். தாயத்துக்களில் உள்ளே வைத்த யந்திரத்தில் மேற்சொன்ன மந்திரம், முத்திரை, சின்னம் என்பவைகளுண்டு. சின்னத்தையே திரவியமென்றும் சொல்வதுண்டு. தாயத்தில் தாமிரம் அல்லது தங்கத்தகடு, சின்னம் அல்லது திரவியம். இது யந்திரத்திற்கு உபாதி. யந்திரமென்பது முத்திரை. முத்திரைக்கு திரவியம் உபாதி. யந்திரமென்னும் முத்திரையின் வீட்டில் பீஜாக்ஷரரூபமான மந்திரத்தை எழுதுவார்கள். பீஜாக்ஷரரூபமான மந்திரத்திற்கு யந்திரமெனும் முத்திரை உபாதி. இந்தப்பிரகாரம் மந்திரம், உபாதி என்பவை பரஸ்பர ஸம்பந்தம்பெற்று ரக்ஷையைத் தரித்தவனுக்கு நன்மையை உண்டாக்குவிக்கும். இங்கு மேல்விவரித்த மூன்று மாத்திரமேயன்று. ரக்ஷையில் மேலும் இரண்டு அம்சங்கள் உண்டு. மந்திரத்தின் தேவதை முதலாவது; அத்தேவதையின் பிரதிநிதியும் உபாதியுமான மந்திரம் இரண்டாவது; அந்த மந்திரத்திற்கு உபாதியான முத்திரை மூன்றாவது; அந்த முத்திரை உபாதியான

* தெலுங்கு திவ்யஞான தீபிகையினின்றும் பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.



சின்னம் அல்லது திரவியம் நான்காவது; இவைகள் எல்லாவற்றையும் உபாஸகனுக்கு அளிக்கும் புருஷன் ஐந்தாம்பேர்வழி. இவனே மாந்திரீகன். மாந்திரீகன் எனின், மந்திரத்தை ஆவர்த்திசெய்து, தத்துவாரா அந்த மந்திரத்தின் தேவதையைக் குறித்துத் தபஸ்செய்து, அத்தபோபலத்தால் அந்த தேவதையை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருப்பவன். இவ்வளவு அம்சங்களோடு கூடின தாயத்து என்பது ரக்ஷை.

ஸாதகஸ்ய தபோயோகாத் தேவஜாயாஸ்ய திஸாய நாக்ஷ।
க்ஷிப்ரம் வ்யாப்ய பிம்பஸ்ய ஸதா ஸந்நிதிதோ ஹ்யஹம்॥

(பிரம்மாண்டபுராணம்.)

என்ற சுலோகத்தில் சொன்ன பிரகாரம் ஸ்தாபகனை மாந்திரீகன் எவ்வளவு யோக்கியனோ, அவனது பக்திசிரத்தை யெவ்வளவோ, அவன் இந்த தாயத்திற்கு எம்மாத்திரம் பூஜைசெய்து எவ்வளவு மஹத்துவத்தை அதனிடம் பிரவேசிக்கச்செய்வானோ, அவன் எழுதிய யந்திரத்தின் கோணங்களெல்லாம் எவ்வளவு சுத்தமாய் வளைவன்னியில் இருக்குமோ, அக்கோணங்களில் எழுதிய பீஜாக்ஷரங்கள் எவ்வளவு தெளிவாக எழுதப்பட்டனவோ, இந்த யந்திரத்தை எழுதும் பொழுதும், எழுதி பூஜையில் இருக்கும் பொழுதும், அவனுடைய நடத்தைகள் எவ்வளவு பரிசுத்தமாக விருக்குமோ, எம்மட்டும் ஸ்வப்பிரயோஜனத்தை விட்டொழித்து பிறர் பிரயோஜனத்தை அப்பியசித்து வருவானோ, இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் அனுசரித்து யந்திரத்திற்கு மஹாத்மியம் உண்டாகி, யந்திரத்திலுள்ள மந்திரத்தின் மூலதேவதை ரக்ஷைகட்டிக்கொண்டவனை அனுக்கிரஹித்து ஸாந்நித்தியத்தையளிக்கும்.

தேவதை சிரேஷ்டமானதாக விருக்கலாம். மந்திரம் ஸ்வச்சமானதாக இருக்கலாம். யந்திரமும் நேர்த்தியாக எழுதப்பட்டிருக்கலாம். பீஜாக்ஷரங்கள் லக்ஷணமாய் எழுதப்பட்டிருக்கலாம். யந்திரமும் பீஜாக்ஷரங்களுமெழுதிய தங்கத்தகடு நல்ல அபரஞ்சித்தகடாக இருக்கலாம். இவ்வ

வாவு நல்ல குணங்கள் கலந்திருப்பினும் மாந்திரீகன் யோக்கியனாக இல்லாவிடின், மேற்சொன்ன உபரியுக்தமான குணங்களெல்லாம் வேண்டிய அளவு பிரயோஜனத்தைக் கொடாது. உதாரணமாக, கோடைகாலத்தில் நல்ல குளிர்ந்த நிர்மலமான குடிதண்ணீரை தாகவிடாய் எடுத்தவனுக்கு அசுத்தமான பாத்திரத்தில் கொண்டுவந்து கொடுக்கின் எவ்வளவுதாக உபத்திரவம் இருக்கினும், அசுத்த பாத்திரத்திலுள்ள ஜலம் எவ்வளவு மதுரமான குளிர்ச்சியை உடையதாயிருந்தாலும் குடிப்பதற்கு மனம்வராது. அவ்விதமாய் மாந்திரீகன் யோக்கியனையும் சுத்தனையும் இல்லாவிடின், ரக்ஷையால் உண்டாக வேண்டிய அளவு பிரயோஜனம் உண்டாகமாட்டாது.

பிரம்மஸ்ரீ ப. நரஸிம்மய்யா அவர்கள் எழுதிவரும் மஹரிஷிசங்கமென்ற வியாசத்தில், பரமரிஷிகள் சங்கம் கூடி உலகக்ஷேமத்திற்காகப் பாடுபடுகிறார்களென்பதாக தெரியவருகின்றது. பிரம்மஸ்ரீ அத்தங்கி சீதாராமசாஸ்திரியார் அவர்கள் திவ்யஞான தீபிகையில் இதுவரைக்கும் எழுதியுள்ள மஹரீபீடமென்ற வியாசத்தில்கூட ரிஷிசங்கம் உலக வியவகாரங்களை பரமேசுவரனது சங்கற்பானுஸாரமாய் நடத்திவருவதாகத் தெரியவருகிறது. ஸ்ரீமத் ஆந்திரவசனபாகவதம் (சதகண்டம் வெங்கடரெங்க சாஸ்திரியாரால் எழுதப்பட்டது,) மூன்றாவது ஸ்கந்தத்தில், 251-ம் பக்கத்தில் "கபிலர்...சித்தசாரணகெந்தர்வ அப்ஸரஸ்கணங்கள் முனிவர் கூட்டங்களைத் துதிக்க மூவுலகிற்கும் சாந்தியுண்டாகக்கூடியதாய் யோகத்தை அவலம்பித்து எல்லாவற்றிற்கும் ஹிதமுள்ளவராய் இருந்தார்'' என எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் ஒருவருக்கேயன்று. பத்துப்பெயர்கள், நூறுபெயர்கள், ஆயிரம்பெயர்கள் மாத்திரமேயன்று. உலகத்தோர்களுக்கும், உலகங்களுக்கும், லோகேசுவரர்களுக்கும் சாந்தி உண்டாக வேண்டுமென்பதாக மஹரிஷிசங்கத்தாரெல்லோரும் தபஸ் செய்துகொண்டிருக்கிறார்களென்பதாகத் தெரியவருகிறது. அவர்களது தபோபலத்தால் உண்டாகும் சாந்தி அதியுன்னதமார்க்கமான ரக்ஷை.



மஹரீபீடத்து ரிஷிகளின் சிஷ்யர்கள் தாரகோபதேசத்தை யடைந்தவர்கள். உலகில் சாதாரண மானிடரூபத்தைத்தரித்து, அவரவர் குருதேவர்களான சுத்தானந்த மூர்த்திகளின் உபயபாதங்களையும் துவந்தமுக்திக்காக ஸதா தியானித்துக்கொண்டு தபஸை மநோமயமாகச் செய்துகொண்டிருப்பார்கள். மனதால்செய்யும் தபஸின் சித்தியால் அஸ்மதாதிகளுக்கு அவர் மஹாத்மியத்தைக் கொஞ்சம் பிரகடித்து நம்மைப் போலொத்தவர்களை தம்மிடம் இழுத்துக்கொண்டு பிரேமைப் பிரவாகத்தைச் செலுத்திக் கொண்டிருப்பார்கள்.

தாரகோபதேசபிராப்திக்கு இன்னும் சித்தப்படாதவர்களும் மஹரீபீடத்து ரிஷிகளில் ஒருவரால் அங்கீகரிக்கப்பட்டவருமான உபாஸகர்கள்கூட தம் குருதேவர் உலகத்திற்கு உபகாரம் செய்யும் விதமாகவே தாங்களும் உபகாரம் செய்வார்கள். என்னைச்சேர்ந்தவன் உன்னைச்சேர்ந்தவன் என்றபேதம் கிஞ்சிற்றேனும் இல்லாமல் ஒழித்து, சூரியனுடைய காந்தி பக்ஷபாதமின்றி எல்லோர்மேலும் எல்லாவற்றின் மேலும் விழும் மாதிரி, தான், பிறர்என்ற பேதமில்லாமலே வியவகரிப்பார்கள். "ஆதட்டாநாகோதிட்ஹஞரம் ஹீதா நாஂஹயநாஸநஂ" என்றபடி பரமகுருவினால் அங்கீகரிக்கப்பட்ட சிஷ்யனும் நிஜவிமுக்திகாமனாகாமல் நிஷ்காமனாகி, அதிகமாய் துக்கப்படுகிறவர்களுக்கு முகமலர்ச்சியையும் துக்கநிவாரணத்தையும் செய்து கொண்டிருப்பான். உலகில் சேவகர்கள் அர்த்தகாமமுள்ளவர்களாகி, ராஜாக்களை சேவிப்பார்கள். ராஜாக்கள் பிரயோஜனத்தை உத்தேசித்து சேவகர்களுக்கு அர்த்தங்களை யளிப்பார்கள். அங்கீகரிக்கப்பட்ட சிஷ்யன் அவ்விதமாகாமல் ஸர்வஜீவாத்ம ஐக்கியபாவத்தை அறிந்துகொண்டு, விக்ஞான திருஷ்டியை அவலம்பித்து, தானே ஜனஸமூஹத்திற்கு ரக்ஷகனாக ஏற்பட்டு, அவர்களில் ஒவ்வொருவருடைய துக்கங்களையும் அறிந்து அதற்கு உசிதமான ரக்ஷைகளை ஏற்படுத்துவான். இவ்வித ரக்ஷையால் அத்புதமான லாபமுண்டே ஒழிய ரக்ஷையை அடையவேண்

டுமெனக் கோருபவர்க்கு இந்த ரக்ஷை கண்ணுக்குப் புலப்படாது. கண்ணுக்குப் புலப்படும் ரக்ஷைகள் கட்டினால்தான் விசுவாசமுண்டாகும்.

கண்ணுக்குப் புலப்படக்கூடிய ரக்ஷைகள் அநேக தரகதிகளாக இருக்கும். அவை தங்கம், வெள்ளி, தாமிரம் முதலாயுள்ள லோகங்களாலே செய்த தாயத்துக்கள் அல்லது சக்கரங்கள், அல்லது ரத்தினங்களால் செய்யப்பட்ட நகைகள்.

நவக்கிரஹங்கள் மனிதர்களுடைய ஜாதகத்தில் பலன்களைக் கொடுக்குமென்ற நம்பிக்கை நம்மவர்களுக்கு விசேஷமாக விருக்கின்றது. சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது என்ற நவக்கிரஹங்களும் பிரதி ஜாதகத்திலும் பாவங்களை உச்சநீசவிதங்களாக நடத்திக்கொண்டிருக்கின்றனவென்றும் எல்லோருமறிவார்கள். கிரஹங்கள் ஒன்பது. ரத்தினங்களும் ஒன்பது. எவ்வொருகிரஹத்திற்கு எவ்வொருரத்தினம் இஷ்டமானது. ஆகையால் ரத்தினங்களைப் பொறுக்கியெடுத்து கிரஹங்களின் பரஸ்பர மைத்திரி, விரோதம் முதலாயுள்ள குணங்களைப் பரிசீலித்து ஜாதகபலனில் நீசபாவத்தையடைந்த கிரஹம் அளிக்கவேண்டிய பலத்தை உத்தமமார்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யும் வண்ணம், உச்சமான கிரஹமளிக்கும் பிரயோஜனமாக மாற்றிக்கொள்ளக்கூடும். அதாவது, வைடூரியத்திற்கு அதிஷ்டான கிரஹம் நீசபாவத்தையடைந்து ஜாதகனுக்கு நீசபலனைக் கொடுத்துக் கொண்டிருக்கின், வைடூரியமென்ற மணியை சம்பாதித்து, அதில் மாந்திரீகனுடைய மனோபலத்தை யேற்றி அந்த வைடூரியத்தை அதற்கனுகூலமான லோஹத்தில் பதித்து ஒரு ஆபரணமாகச்செய்து, ஜாதகனுக்குக் கொடுக்கின் நீசபாவத்தையடைந்த கிரஹத்திற்கு நீசமொழிந்து நல்லசக்தியுண்டாகும். அந்தகிரகம் உச்சாவஸ்தையில் இருக்கின் எந்தப் பிரயோஜனத்தைக் கொடுக்குமோ அவ்வித பிரயோஜனத்தைக்கொடுக்கும்.



மானிடகோடி யெல்லாம் ஸப்தரேகைகளில் ஏதோ ஒரு ரேகைக்குச் சேர்ந்தவர். ஸரிகமபதநி யென்ற ஸ்வரங்கள் ரேகைகளாக எண்ணின் ஷட்ஜரேகைக்குச்சேர்ந்தவர்கள் சிலர். ரிஷபரேகைக்குச் சேர்ந்தவர்கள் சிலர். காந்தாரரேகைக்குச் சேர்ந்தவர்கள் சிலர். மத்திமரேகைக்குச் சேர்ந்தவர்கள் சிலர். பஞ்சமரேகைக்குச் சேர்ந்தவர்கள் சிலர். தைவதரேகைக்குச் சேர்ந்தவர்கள் சிலர். நிஷாதரேகைக்குச் சேர்ந்தவர்கள் சிலர். இந்தப்பிரகாரம் ரேகைவிபாகங்களுண்டு. ரேகைகளுக்கு அதிஷ்டான தேவதைகள் உளர். நிஷாதரேகைக்கு அதிஷ்டான தேவதை சூரியன். அதாவது சூரியகிரஹம். நிஷாதரேகைக் காரருக்கு ரக்ஷை கட்டவேண்டுமாயின் சூரியகிரஹத்தை அதிஷ்டான தேவதையாக உள்ள மணியை சம்பாதித்து, அதில் சூரியக்கிரஹசம்பந்தமான லோகத்தில் பதித்து, அந்த ஆபரணத்தை ரக்ஷையாகக் கொடுக்கவேண்டும். ரக்ஷணசக்தியை மணியினிடம் பிரவேசிக்கச் செய்யின், வெகு காலம் அந்த சக்தி அதனிடம் உறுதியாய் நின்று, அந்த ரக்ஷையைக் கட்டிக்கொள்பவனை ரக்ஷித்துக்கொண்டிருக்கும். மணிகளையும் கிரஹங்களையும் குறித்து சாஸ்திரத்தில்,

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

லோஹங்களைக்குறித்தும் அவைகளின் கிரஹங்களைக் குறித்தும்,

“[illegible]” அதாவது [illegible]

[illegible] என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விஷயத்தைக்குறித்து எழுதவேண்டியது அதிகமிருக்கின்றது. ஆனாலும் இப்பொழுது இத்துடன் நிறுத்துகிறேன்.

கோதண்டராமன்.

---

௨

# பகவத்கீதை.

## முன்னுரை.

உருவாய், அருவாய், உளதாய், இலதாய், எல்லாமாய், அல்லதுமாய அந்த வஸ்து, தன்னில், தானே வியக்த அவ்யக்தங்களாகத்தோன்றும் விசித்திரங்களை வெகுவிரிவாக விளக்கியுள்ள உபநிஷதங்களின் சாரமாகிய யோக சாஸ்திரமான இந்த நூலை தீரபுருஷனை அர்ஜுனனுக்கு அவன் பக்கம் எப்பொழுதும் பிரிவறக்கலந்துறையும் கிருஷ்ண பரமாத்மா, யுத்த பூமியில் உபதேசித்தார் என்பது எல்லாருக்குந்தெரிந்த விஷயம். அர்ஜுனனைப் போன்ற தீரர்களெல்லாருக்கும் உபதேசித்துக்கொண்டே யிருக்கிறார், எல்லையில்லாமல் உபதேசித்துக் கொண்டேயிருப்பார் என்பது உண்மையே நாடும் ஞானிகள் அறிவார்கள். எவ்வளவோ சகுணப் பிரமங்களான "பராக்கள்" கழிந்துவிட்டன. அவைகளின் சங்கியையை யாராலும் அறியவேமுடியாது. தற்போதைய பராவிலுள்ள 'சுவேதவராக' கல்பத்தின், வைவஸ்வத மன்வந்தரத்தில் நடந்த இந்தக் கீதா உபதேசம், முந்திய எல்லாப் பராக்களுக்கும் இனிவரும் எல்லாப் பராக்களுக்கும் ஏற்றதேயாகும். ஆகவே இது பரம சாசுவதமான உண்மை நூல். "ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடலில், நாழி முகவாது நானாழி" என்றபடி அந்தக்கரணத்தில் உண்மை விளக்கமுண்டாவதற்குத் தக்கபடி இந்நூலின் அருமை அனுபவிக்கப்படும். மனிதரென ஆகும் மாண்பு படைத்தோரெல்லாம் பரமாசாரியனுடைய இந்த உபதேச மொழிகளைப்பரம பக்தியுடன் ஏற்றுப் பாவனர்களாகுக.



## ௧வது அத்தியாயம்.

அர்ஜுன விஷாத யோகம். அதாவது அர்ஜுனன் தன் மனதிலேற்பட்ட வியாகூல பாவனையோடொன்றினது.

திருதராஷ்டிரன் சொல்.

1. [illegible]

(இதன்பொருள்). தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில், சண்டை செய்பவர்களாய் சேனைகளை அணிவகுத்து நம்மவர்களும் பாண்டவர்களும் என்ன செய்தார்கள், ஓ! ஸஞ்சய, என்று திருதராஷ்டிரன் கேட்டான்.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இவை நான்கும் சேர்ந்து அந்தக்கரணம் என்று சொல்லப்படும். 'ஜீவன்' என்பது சச்சிதானந்தமான சகுணப் பிரமத்தின் பிரதிநிதி. இது ஒவ்வொரு மனிதனுள்ளும் இருக்கிறது. மனிதனகவும் இருக்கிறது. யாதொரு பற்றுமே யில்லாத அகண்ட பரிபூரண சச்சிதானந்தம், அந்தக்கரணத்தின் மூலமாய் ஸ்தூல வியக்தமாகும்போது தர்மமாகவும், கர்மமாகவும் பரிணமித்து இவற்றைத் தத்துவமாக "அனுபவிக்காமல் அனுபவிக்கிறது." அந்தக்கரணந் தான் யுத்தகளம் என்றும், மார்க்கம் என்றும் சொல்லப்படும். அந்த மார்க்கத்தில் அடியெடுத்து வைக்கும் தீரபுருஷன் தான் சிஷ்யத்வத்திற்கு லாயக்காகிறான். சில தீக்ஷைகளானபிறகு சீடன் வேறு பாதை வேறு என்பதில்லாமல், சீடன் பாதையாகவே ஆய்விடுகிறான் என்பதைத் தத்துவ விசாரிகள் அறிவார்கள். "The Desciple becomes due path itself." இப்பொழுது பாண்டவர்களும் கௌரவர்களும் ஒருவர்க்கொருவர் விரோதிகளாயினும் ஒவ்வோர் சார்பினரும் ஒவ்வோர் பான்மைப்படி ஈசனுடைய சீடர்களே. ஒரு சாரரைக் காத்து ரக்ஷிக்கிறார். ஒரு சாரரை அழித்து ரக்ஷிக்கிறார்.

சகுணப்பிரம வியக்த ஆபாசங்களான தர்மமும், கர்மமும் அந்தக்கரணத்தின் இரண்டு பிரிவினைகளே—தர்மமில்லாமல் கர்மமில்லை. கர்மமில்லாமல் தர்மமில்லை. இதில் மனமும், புத்தியும் தர்மத்திற்கு ஆதாரமாயும் (Duty) அதாவது தர்மக்ஷேத்திரமாகவும், அகங்காரமும், சித்தமும் கர்மத்திற்கு ஆதாரமாகவும் (Rights) குருக்ஷேத்திரமாகவும் கொள்ளலாம். அந்தக்கரணமான யுத்தபூமியில் ஒரு பகுப்பான தர்மக்ஷேத்திரத்தில் பாண்டவர்களும் இன்னொரு பகுப்பான குருக்ஷேத்திரத்தில் கௌரவர்களும் சண்டைசெய்வதற்காக அணிவகுத்து நின்றார்கள். ஆகவே மனிதனுடைய தத்துவங்களனைத்தும் இவ்விரு பகுப்புகளிலும் பகுப்புகளாகவுமே ஏற்படுகின்றன. அணிவகுப்பு—தர்மக்ஷேத்திரத்தில் அதாவது மனம், புத்தி, இவைகளில், மகாபூதங்களின் பிரதிநிதிகளான பாண்டவர்களைவர்—

குருக்ஷேத்திரத்தில், அதாவது அகங்காரம் சித்தம் இவைகளில், அகங்காரம் 1, புத்தி 1, அவ்யக்த மனம் 1, கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, கர்மமனம் 1, வியக்த மனம் 1, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் இந்திரியகோசரங்கள் 5, விருப்பு, வெறுப்பு, சுகம், துக்கம் ஆகிய இவைகளின் கூட்டம் ஸமஷ்டியாக 1, ஆக இருபதும் தனித்தனியே மகாபூதங்கள் ஐந்தினிடமும் தாக்கலினால் 20 × 5 — 100. ஆகக் கௌரவர்கள் நூற்றுவர்.

இவ்விருதிறத்தினருமே அந்தக்கரணம் முழுதும் பிரிக்க முடியாமல் கலந்திருந்தாலும், நிவிர்த்திமார்க்கத்திற்கு ஆரம்பித்தவுடன் தர்மக்ஷேத்திரமான மனம், புத்திகளில் பாண்டவரும் குருக்ஷேத்திரமான அகங்காரம், சித்தம் இவைகளில் கௌரவர்களும் அணிவகுத்துச் சண்டைசெய்யவேண்டும் என்றும் ஊகிக்கலாம். இதனால்தான் அந்தக்கரணத்தை யுத்தகளமாகச் சொல்லியிருக்கிறார்கள்—Intellect வேற்றுமை நினைப்பான (சத்துப்பான்மையிலிருந்து ஜனித்தவனான) ஸஞ்சயனைப்பார்த்து ஸ்தூலசரீரமான (அகங்காராதிகளுக்கு ஜனனஸ்தானமாகிய) திருதராஷ்டிரன் கேட்கிறதாகக் கொள்ளலாம்—

K. S. Ramasamy Iyer.

# நாரத பக்தி ஸூத்ரங்கள்.

## முகவுரை.

"அதி சீக்கிரத்தில் மைத்ரேய பகவான் என்னும் ஜகத்குரு உலகில் தோன்றுவார். அவரைத்தெரிந்து வரவேற்குமாறு எல்லோரும் பக்தி, ஸ்தைர்யம் சாந்தம் என்னும் முக்குணங்களையும் தங்கள் தங்கள் சீலத்தில் பிரதான அம்சங்களாக அமைத்துக்கொள்ளல்வேண்டும். ஒவ்வொருவரும் பிரதிதினமும் செய்யும் காரியம் எதையும் அவர் பெயரால் செய்து, அதைத்தமது பூரண சக்தியோடு அழகுற முடிக்கவேண்டும். அவர் சீக்கிரம் உலகிற்குவந்து உலகத்தில் நிலைவரமான ஸமாதானத்தை ஏற்படுத்தும்படி தினமும் காலையிலும் மாலையிலும் பிரார்த்திக்கவேண்டும். அவர் வரும் வழியைச் செவ்வைசெய்யக்கூடிய காரியம் ஏதேனும் ஒன்றை ஒவ்வொருநாளும் செய்தல்வேண்டும். இச்செய்தியை வெகுஜனங்களுக்குப் பரவச்செய்ய ஓர் மஹாசங்கம் ஏற்பட்டுளது. அது உலக முழுமைக்கும் பொது, உலக முழுமையும் பெரும் பிரயத்னங்கள் இச்சங்கத்தின் விஷயமாய் நடக்கின்றன. தமிழ்நாட்டாரும் தமது உத்தரவாதத்தை யுணர்ந்து தக்க முன் ஆயத்தங்களைச் செய்யவேண்டும்.

பக்தியைப்பற்றி ஸ்ரீ நாரத பகவான் திருவாய் மலர்ந்தருளிய ஸம்ஸ்கிருத ஸூத்திரங்களை என் சிற்றறிவுக் கெட்டியமட்டில், தமிழில் மொழிபெயர்த்துக் குறிப்புரையுடன் வெளியிட்டிருக்கிறேன். ஸநாதனமான பக்திமார்க்கம் தற்காலத்தில் பிரஹ்மஞான ஸபையாரால் உலகத்தில் பரவச்செய்யப்படுகிறது என்பது என் கொள்கை. பக்தியென்பது எல்லோரும் அப்பியசிக்கத்தக்க மார்க்கம் என்பதும், மற்ற மார்க்கங்களைக்காட்டிலும் அது எங்ஙனம் சிரேஷ்டமென்பதும், அதன் சாதனங்கள் என்னவென்பதும் அதன் ஸ்வரூபம் என்னவென்பதும், அதன் ஆசாரியர்கள் இன்னாரென்பதும் இதன் மூலமாய் இனிது விளங்கும்.

இதைப் பரமாசார்யனாகிய ஸ்ரீ ஜகத்குருவின் பாதங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

அடையார், பி. எஸ். ராமசுப்பையர்.

# நாரத பக்தி ஸூத்ரங்கள்.

1. அதாதோ பக்திம் வ்யாக்யாஸ்யாம:

இப்போது பக்தியை வியாக்கியானம் செய்வோம்.

2. ஸா த்வஸ்மின் பரமப்ரேமரூபா।

அது (பக்தியென்பது) உயர்தரமான பேரன்பின் ரூபமானது.

குறிப்பு:—பிரேமையென்பது அன்பேயாம். இவ்வன்பு எவ்வுயிரிடத்தும் உள்ளது. இதை உதாஹரிப்பதற்கே ஸ்ரீ சங்கரர் காந்தம்—ஊசி, மரம்—படர்கொடி, பதி—பத்நீ என்னும் சாம்யங்கள் கூறியிருக்கிறார். மனிதனிடத்திலும், பிராணியிடத்திலும், விருக்ஷ ஜாதியிடத்திலும், தாதுப்பொருள்களிடத்திலும், அன்பு என்னும் தர்மம் ஆழ்ந்திருக்கிறது. இத்தகைய ஸகலவித அன்பையும் தன்னுள் ளடக்கிய பேரன்பு வடிவமே பக்தி எனப்படும்.

3. அம்ருதஸ்வரூபா ச ॥

அழிவற்ற ஸ்வரூபமுடையது.

குறிப்பு:—உலகத் தோற்றம், உலக சுகம், லௌகிக அறிவு இவை நிலைவரமல்லவென்று, ஒவ்வொருவனும் தன் ஆத்ம விகாஸமுறையில் ஓர் படியில் வந்தபோது உணருகிறான். பின் வரும் உபநிஷத் வாக்கியங்களின் பிரகாரம் முப்பான்மையதான ஓர் தாஹம் அவனுக்கேற்பட்டுக்கதறுகிறான். ஈசன் ஸத், சித், ஆனந்த ரூபியாகையாலும், ஜீவாத்மா அவருடைய அம்சமாகையாலும், மனிதன் அம்மூன்றின் அம்சங்களாகிய ஞான, இச்சா, கிரியா சக்திகளைப் பரிபூர்ணப் படுத்திக்கொள்ளவே ஈசனிடமிருந்து வந்தானாகையாலும், பூர்ணம் பெற்றபிறகு அந்த ஈசனையே அடைகிறான் ஆகையாலும், பரிபூர்ணம் ஆவதற்கு எதைக்களையவேண்டும், எதைக்கொள்ளவேண்டுமென்பதை நிச்சயித்துக் கதறுகிறான்.

அஸதோ மா ஸத்கமய



ஸத்—பொய்யினின்று விடுவித்து மெய்யையருளும்.

தமஸோ மா ஜ்யோதிர்கமய

சித்—அக்ஞானத்திலிருந்து விடுவித்து ஞானத்தையருளும்.

ம்ருத்யோர்மா அம்ருதம் கமய

ஆனந்தம்—மிருத்யுவினின்று விடுவித்து அமிருதத்தையருளும்.

ஈசனையடையும் மார்க்கம் ஒன்றேயாயினும், அதிகாரி பேதங்களுக்குத் தக்கவாறு பற்பல பெயர்களைப் பெறுகின்றது. சிலர் இதைக் கர்ம மார்க்கமென்பர். சிலர் இதை ஞான மார்க்கமென்பர். சிலர் இதை பக்தி மார்க்கமென்பர். மூன்றும் அதிகாரி பேதங்களால் இடப்பட்ட பெயர்கள் வெவ்வேறு அதிகாரிகளுடைய தகைமைக்கேற்ப, இம்மார்க்கம் லவலேசம் மாறுபடும்.

4. யல்லப்த்வா புமான் ஸித்தோ பவதி அம்ருதோ பவதி த்ருப்தோ பவதி ॥

எதையடைந்தவுடன் (ஒருவன்) சித்தி பெற்றவனாவானோ, அமிருதத்துவம் பெறுவானோ, திருப்தியடைவானோ, (அதுவேபக்தி.)

குறிப்பு —இச் சூத்திரத்தாலேயே, மனிதன் ஜயிக்க வேண்டிய இடையூறுகளும், எத்துணையோ விருக்கின்றன, என்பது புலனாகின்றது. உலக சுகங்களும் சம்பத்துக்களும் நசுவரமானவை என்பதும், அவைகளால் மனிதன் திருப்தியடையக்கூடாமல், மேன்மேலும் ஆசைகளும், பாசங்களும், துக்கங்களும் பெருகுகின்றன வென்பதும் பெறப்பட்டன காண்க.

5. யத்ப்ராப்ய ந கிஞ்சித்வாஞ்சதி ந சோசதி ந த்வேஷ்டி ந ரமதே நோத்ஸாஹீ பவதி ॥

எதையடைந்தவுடன் வாஞ்சை ஏதும் கிடையாதோ, சோகம், துவேஷம் ஒன்றும் கிடையாதே, ரமித்தலாவது உத்ஸாஹமாவது கிடையாதோ அதுதான் பக்தி.

குறிப்பு:— நிரதிசயானந்தம் என்று ஸம்ஸ்கிருதத்திலும், உயர்வற உயர்நலம் என்று தமிழிலும் கூறப்பட்டுள்ள முடிவே பக்தி யென்பதாக இச்சூத்திரம் விளக்குகிறது. அந்தக்கரண விர்த்திகளில் க்ஷணிகமானவையும் சஞ்சல சுபாவமுடையனவும் அழிகின்றன. பிரஹ்ம ஞான சபையார் கூறுகிறபடி காயமா சரீரம் புனிதம்பெற்று, பலப்பட்டு அசைவற்றிருக்கிறது.

6. யஜ்ஜ்ஞாத்வா மத்தோ பவதி ஸ்தப்தோ பவதி ஆத்மாராமோ பவதி।

எவையறிந்ததும், (ஆனந்தத்தால்) மதமடைந்தவனாகவும், (ஆனந்தத்தில்) நிலை பெற்றவனாகவும், ஆத்மாவினிடத்தே ரமிக்கிறானோ அதுதான் பக்தி.

குறிப்பு:—உலகத்திலுள்ள எதுவும் இவனுக்கு சுகரூபமாகவும், ஆனந்த ரூபமாகவும், ஸௌந்தர்யரூபமாகவும், இதர பல கல்யாண குணங்களின் உருவமாகவே தோன்றும் அவ்வித உணர்ச்சியே பக்தனுக்குப் பிரதானமாயிருக்கும். பின் வரும் உபநிஷத் வாக்கியங்கள் பக்தி மார்க்கத்திற் பூர்ணம் பெற்றவனுடைய அநுபவத்தை நன்கு விளக்குவனவாகத் தோன்றுகிறது.

ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜானாத்
ஆனந்தாத்த்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே।
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி
ஆனந்தம் ப்ரயந்த்யபிஸம்விசந்தீதி॥

"ஆனந்தமே பிரஹ்மமென்றும், ஆனந்தத்தினின்றே இந்த ஜீவராசிகளெல்லாம் உண்டாகின்றனவென்றும், அப்படிப் பிறந்தனவெல்லாம் ஆனந்தத்திலேயே வளர்கின்றனவென்றும், அவைகள் இறந்த பிறகும், ஆனந்தத்தையேயடைகின்றனவென்றும் உணர்வான்.

இவ்வழியிற் புகுந்தவர்கள் கான ரூபமாகவும் ஆனந்த ரூபமாகவுமே பிரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவர்கள். இந்கிரந்த கர்த்தவாகிய நாரத பகவானே வீணாகானத்திற் சிறந்த



வரென்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய லீலாமிருத ரஸங்களினின்றும் அவருடைய ஆநந்தாநுபவம் இத்தன்மையதென்று ஊகிக்கும்படி விளங்கும். அவரது வேணுகானமும் இங்கு கவனிக்கத் தக்கது. கிரீஸ் தேசத்தில் ஸ்ரீ பிதகோராஸ் அவர்களுடைய சரித்ரத்தைப் பார்ப்போமாகில் அவர் ஸங்கீதத்திற் தேர்ந்த நிபுணராயிருந்ததோடு, ரத்னக் கற்களைப் பற்றிய நகாசு வேலைகளில் தேர்ந்தவராகவுமிருந்தார். ஆதலால் ஸௌந்தர்ய ரூபங்களையே காண்பித்தும், ஸௌந்தர்ய ரூபங்களையே அமைப்பதுமே அவருடைய பயிற்சியாயிருந்திருக்கிறது. ஆர்பியஸ் என்பவரும் கிரீஸ் தேசத்தில் பிரபலராயிருந்த ஓர் பக்தன். அவருடைய ஹார்ப் வாத்யத்தைக் கேட்ட காட்டுச் சிங்கங்கள் கூட, ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய வேணு நாதத்தைக் கேட்டு பிரமித்து நின்ற பசுக்கள்போலவே நின்றனவாம். வேறு சில பக்குவிகளுக்கு, உலகின் துன்பங்களும் கஷ்டங்களுமே விரக்தியை உண்டுபண்ணி அதன் பயனாய் துக்கநிவாரணமார்க்கம் என்னவென்று கண்டுபிடித்து, அவ்வழியில் தாம் செல்வதோடு, பிறருக்கும் அதைப் பகிரங்கப்படுத்திக் கர்மயோகத்தை நிலை நாட்டுவார். இதற்கு உதாரணமாக பகவான்புத்தருடைய சரித்ரத்தைப் பார்க்கலாம். நவீனமான பெரியோர்களில் ஸ்ரீ பெஸண்டு அம்மையார் இத்தகைய வழியை மேற்கொண்டவரென்று தெரிகிறது. இன்னும் வேறு சில பக்குவிகள் ஸ்ரீ சங்கராச்சார்யரை யநுசரித்து கார்ய காரணங்களைத் தீர விசாரித்துத் தத்துவத்தை யறிவார்கள். இவர்களுக்கு ஞான யோகமே மெத்தவும் பயன்படும். இம்மூவகையினர்களுக்குள்ளும் பக்தி பரிபூர்ணமாயமைந்திருப்பினும், ஒவ்வொருவரிடத்தும் ஓரோர் வகையாக விளங்குகிறது.

7. ஸா ந காமயமானா நிரோதரூபத்வாத்।

அது (பக்தி) காமனையல்ல. ஏனெனில் காமனையினின்று ஒழிவின் (தியாக) ரூபமாயுள்ளது.

குறிப்பு:—மனிதனுடைய ஆத்ம விகாஸத்தைக் கவனிக்கையில் அது இருபான்மையாயுள்ளது. அதாவது பிரவிர்த்தி, நிவிர்த்தி எனப்படும். மனிதன் பிரவிர்த்தி மார்க்கத்தில், தன் ஆத்ம சக்திகளான ஞான. இச்சா, கிரியா சக்திகளை மலரச்செய்து, அவைகளினால் தன்சொந்த பிரயோஜனத்தை யடைகிறான். பிறகு அடுத்து உள்ள நிவர்த்திமார்க்கத்தில், இதுவரை தன் சொந்த பிரயோஜனத்தைக் கருதிச் சேகரித்த ஆத்மசக்திகள் அனைத்தையும், லோகக்ஷேமத்திற்கு உபயோகிக்கிறான். பகவத்கீதையிலும்.

ஸக்தா꞉ கர்மண்யவித்³வாம்ஸோ யதா² குர்வந்தி பா⁴ரத। குர்யாத்³ வித்³வாம்ஸ்ததா²ஸக்த꞉ சிகீர்ஷுர் லோகஸங்க்³ரஹம் ॥

“அறிவிலிகள் (தனக்கென்ற) பற்றுடன் கருமங்களை எப்படிச்செய்கிறார்களோ, அப்படியே (தனக்கென்ற பற்று அற்று) லோகக்ஷேமத்தை விளைக்கக்கருதி, அறிவுடையோர் உழைக்கக்கடவர்.” என்று கூறப்பட்டுளது.

ஸ்ரீமான் லெட்பீடர் என்ற பெரியார் ஒருவர் கூறியபடி, ஒரு வீடு கட்டி முடியும்வரை மூங்கிற் சாரங்கள் அவசியமாயினும், வீடு கட்டி முடிந்தவுடன் அவைகள் தகர்க்கப்படவேண்டியனபோல, ஞான, இச்சா, கிரியா சக்திகளைச் சேகரித்துக் கொள்ளும் வரை சுயநயம் அவசியமாயினும் சேகரித்த பிறகு சுயநயம் தகர்க்கப்படவேண்டும். தற்காலத்தில் மனிதவர்க்கத்தில் சாமான்யமாய் எல்லோருக்கும், ஞான, இச்சா, கிரியா சக்திகள் ஒரேயளவு விருத்தியடைந்திருக்கின்றன. எல்லோருக்கும், அறியும் தகைமையும். விரும்பும் தகைமையும், செய்யும் தகைமையும் சுமாராய் ஒரே இயல்பினவாய் உள்ளன. ஆகையால் இப்போது மனிதவர்க்கம் நிவர்த்திமார்க்கத்தில் அடிவைக்கும் தருணத்திலுள்ளது. ஆகையால் நாமெல்லோரும் பிறர்நலத்தை முதன்மையாகக் கருதிச் சுயநயத்தை இரண்டாவதாகக் கருதவேண்டும். தற்



கால நாகரீகத்தில் நந்தேசத்தில் எத்தனையோ அரிய படிப்பாளிகளும் உழைப்பாளிகளும் இருப்பினும், அவர்கள் தமது சொந்த சுகத்திற்கும் மேலாகப் பொது நன்மையைக்கருதி யுழைக்கின்றனரில்லை. முற்காலத்து ரிஷிகளும், பிராமணர்களும் இதர வருணத்தார்க்கும் ஹிதம் புரிந்து வந்தமையால் அவர்களுக்கு பூஜ்யதை இருந்தது. தற்காலத்திய போலிப் பிராஹ்மணர்கள் பூஜ்யதையைமட்டும் விரும்புகிறார்களே யொழிய அறிவிற்றாழ்ந்த ஜாதியார்களுக்கு கல்வி கற்பிக்கக் கூசுகிறார்கள். தியாகரூபமானது எனில், தியாகத்திற்கு விஷயம் என்னவென்பதை பின்வரும் சூத்திரத்தில் விவரிக்கிறார்.

8. நிரோத⁴ஸ்து லோகவேத³வ்யாபாரந்யாஸ꞉।

லௌகிக வைதிக வியாபாரங்களை விட்டொழித்தலே தியாகமாம்.

குறிப்பு:—மனிதர் பலர், தமது நித்ய கருமங்களிற் சிலவற்றை வைதிகமெனவும், மற்றவைகளை லௌகிகமெனவும் ? பிரித்து ஒழுகுகிறார்கள். பக்திமார்க்கத்தார்க்கு அத்தகைய பேதம் கிடையாது. வாழ்நாளிற் செய்யும் எவ்வற்பமான காரியத்தையும் ஒன்றுபோலவே பெருமையுடைத்தாய்ச் சிரத்தையுடன் செய்வார்கள். “லௌகிக வைதிக வியாபாரங்களை யொழித்தல்” என்பதற்கு எல்லாவற்றையும் விட்டு சும்மா இருத்தல் என்றருத்தமல்ல. தற்காலத்து யதிகள் தம்பொருக்கு ஏற்காத விதமாய்ச், சும்மா வீணே காலத்தைக் கழிக்கிறார்கள். ஒன்றிலேயே ஈடுபட்டு உழைக்கிறவர்களுக்கு பேத புத்தி நசித்துப்போம். லௌகிக வைதிக வியாபாரங்களை ஒழித்தவர்கள் என்பதற்கு லௌகிகம், வைதிகம் என்னும் பேத புத்தியை ஒழித்தவர்கள் என்றர்த்தம்.

9. தஸ்மிந்நநந்யதா தத்³விரோதி⁴ஷூதா³ஸீநதா ॥

அதி(பக்தியி)லேயே ஒன்றுபட்டிருத்தல், அதற்கு மாறானவைகளைக் கவனியாதிருத்தல்.

குறிப்பு:—இம்மார்க்கத்தில் செல்லும் பக்தர்களுக்கு பக்தியிலேமட்டும் மனம் குவியும். ஆயினும் அதற்கு மாறானவைகளில் தாம் புகாமலிருப்பார்களே யொழிய அவற்றைத் துவேஷிக்கமாட்டார்கள். பக்தர் சிலர் மற்றைய சாரர்களைத் துவேஷித்திருப்பதாகச் சொல்லப்படும். கதைகள் யாவும் மூடபக்தியால் விளைந்தனவேயாம். * ஆத்ம வித்யா முறையில் ஒரு வழியிற் செல்லுமளவும் மற்ற வழிகளிற் புகாதிருத்தலும் அவசியமாகும். பக்தி ஒன்றையே பற்றினால் மாறானவைகள் நிச்சயமாக நழுவும்.

10. அந்யாச்ரயாணாம் த்யாகோऽநந்யதா ।

மற்ற மார்க்கங்களை ஆசிரயிப்பதை யொழித்தலே அநந்யதையாகும்.

குறிப்பு:—பக்தியிற் பலப்படுவதற்கு இரண்டு வழியிலும் முயலவேண்டும். அதாவது பக்தியிலே ஒருவழிப்படுதல் ஒன்று. மற்றவைகளை ஆசிரயிக்காமல் ஒழிப்பது இரண்டு. இவ்விரண்டும் ஒன்றையொன்று பொறுத்திருக்கிறது. தம் சக்திகளைப் பற்பல வழிகளிற்சிதரவிடாமல், ஒரே குறிப்பாய் ஒரே மார்க்கத்தில் வேகமாய் நாடுவதே முமுக்ஷுவின் லக்ஷணம். மேன்மார்க்கத்தில் செல்வதென்றால் குணம் கொள்வது மட்டும் போதாது. குற்றம் களைதலும் வேண்டும். ஏனெனில் உலகத்தில் முற்றிலும் நன்மையானதும் முற்றிலும் தீமையானதும் கிடையவே கிடையாது. இரண்டும் கலந்தே உள்ளன. ஆகையால் நாம் இருவகையாக முயலவேண்டும்.

11. லோகவேதேஷு ததநுகூலாசரணம் தத்விரோதிஷு உதாஸீநதா ॥

லௌகிக வைதிக கர்மங்களில் பக்திக்கு அநுகூலமானவற்றையே ஆசரிப்பதும், அதற்கு விரோதமானவைகளில் உதாஸீனமாயிருப்பதுமேயாம்.

# திருக்குறள்.

## முகவுரை.

உலகமெல்லாம் பிரசித்திபெற்ற இந்த அருமையான நூல் திருவள்ளுவ நாயனார் மூலமாய் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதன் அருமை பெருமைகளைப்பற்றி பண்டிதர்கள் பலரும் கொண்டாடி உலகெலாம் பரப்பியிருக்கிறார்கள்—இதற்கு வியாக்கியானங்கள் பலபண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். இன்னம் எழுதிக்கொண்டும் வருகிறார்கள்—இது அநேக பாஷைகளில்மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன—ஆதி என்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும் பிறந்த மூன்று ஆண்கள் நான்கு பெண்கள் ஆகிய எழுவருள் இவர் ஒருவர் என்பதைக் கவனிக்கும்போது ஈசுவர ஆஞ்ஞாக்கிரமத்தில் இவர் ஓர் அதிகார புருஷராயிருக்கலாமோ என்று ஊகிக்க இடமுண்டாகிறது.

உலகத்தை உய்விக்கவந்த உபதேசகர்த்தர்களில் தமிழுலகுக்கு அனுப்பப்பட்ட தயாநிதியான இந்த ஞான வடிவினர்தான் செய்துள்ள ஒவ்வொரு சிறிய பாட்டிலும் தன்னைப் பூர்ணமாகக் காட்டியிருக்கிறார்:—இந்நூலின் பெருமையை அவர் முதற்பாட்டினாலேயே விளக்கி யிருக்கிறார்.

K. S. ராமஸாமி அய்யர்.

# திருக்குறள்.

## கடவுள் வாழ்த்து.

1. அகரமுத லெழுத்தெல்லாம் ஆதி
பகவான் முதற்றே யுலகு—

இதன்பொருள்—எழுத்துகளுக்கெல்லாம் ‘அ’ என்னும் எழுத்து முதலாக இருக்கிறது. உலகு, ஆதி, பகவனையே முதலாக உடைத்தாயிருக்கிறது.

இவ்வுபமான உபமேயங்கள் பிம்ப ப்பிரதிபிம்ப பாவனையால் விளக்கப்பட்டுள்ளன—எப்படியென்றால் எழுத்தெல்லாம் என்றால் ஓரெழுத்தொருமொழியான அ, உ, ம, வினால் ஆகிய பிரணவத்தையே குறிக்கும். இதற்கு—

" ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மந்த
ஒருமொழியே மலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றமொழி யெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் கண்டாய் "

என்றும் தாயுமானவர் வாக்கே சான்று. இவ்வெழுத்துத்தான் சகுணப் பிரமத்தைக் குறிக்கிறது. பிரிக்க முடியாத சாசுவத மும்மையான சத்து, சித்து, ஆனந்தம்தான் பிரமா, விஷ்ணு, சிவன் என்று சொல்லப்படுகிறது. இந்த சாசுவத மும்மை விளக்கமடைந்து விரிந்து ஏற்றமடைந்து எல்லையின்றி விகசித்துக்கொண்டேபோக அடிப்படையாகயிருப்பதே மகா மாயையென்றும் பிரகிருதி — எப்படி, பிரணவம் என்பது அ, உ, ம என்ற இந்த மூன்றும் சேர்ந்தேதான் விளங்கமுடியுமோ அப்படியே மகா மாயையும் பூ:, புவ: சுவ: என்ற மூன்றுலகங்களாகச் சேர்ந்தேதான் விளங்கும் இப்பொழுது சகுணப் பிரமத்தில் 'அ' முதலிலும் பிறகு 'உ' என்னும் எழுத்தும், கடைசியில் 'ம' என்பதும் தோன்றல் ஒழுங்கான கிரமம்-மேற்கண்ட இம்மூன்றும் மகாமாயா சமுத்திரத்தில் பிரதிபலிக்கும்போது, அடியிலுள்ள 'ம' பிரதிபலிக்க சுவர்லோகமாகவும் நடுவிலுள்ள 'உ' பிரதிபலிக்க புவர்லோகமாகவும், தலையிலுள்ள 'அ' பிரதிபலிக்க பூலோகமாகவும் காணப்படுகின்றன. ஆகவே 'உலகு' என்றால் தூலம், சூக்குமம், காரணம், என்னும் மூன்று உலகங்களையும் குறிக்கும்.

எழுத்து = அ, உ, ம,

உலகு = பூ:, புவ:, சுவ:,

எல்லாவற்றுள்ளும் எல்லாம் பொதுவாக விளக்கமுறினும் குறிப்பாக விளங்கும் கிரமம் இது. ஆகவே நமது



தூல உலகத்தின் முதற்காரணம் 'ஆதி' என்னும் சுவர்லோகமும் 'பகவன்' என்னும் புவர்லோகமுமே—ஆதி என்பதற்கு ஜாதிகிடையாதாதலினால் அதைப்புலைச்சியாகவும் 'பகவன்' என்பது புவர்லோகத்திலுள்ள தட்பத்தையும் சுகத்தையுமே விளக்கும் ஸ்தானத்தைக் காட்டுவதால் அதை அந்தணனாகவும் உருவகம்செய்து இவ்விரண்டு தத்துவங்களும் சேர்ந்து தங்களுடைய விகசத்திற்கென்றே எடுத்துக்கொண்டது தூலதேகம் என்று ஊகிக்கலாம்—ஆகையால் ஆதாரம் என்னும் உயிர் உலகத்தில் 'அ' முதலிலும் 'உ' பிறகும் 'ம' கடையிலும் இருத்தல் மகாமாய என்னும் 'உடல்' உலகில் பிரதிபலிக்கும்போது, சுவர்க்கம், முதலிலும், புவர்லோகம், பிறகும், பூலோகம் கடைசியிலுமே வருகிறது என்பது இப்பொழுது விளக்கமாகிறது. பிரணவம் விளங்க மூன்றெழுத்தும் சேர்ந்தேதான் இருக்கவேண்டியதுபோல உலகம் விளங்க மூன்றுலகங்களும் சேர்ந்தேதான் இயங்கவேண்டியது. இனி உபமானமான எழுத்தில் 'அ' முதலாகவும் உபமேயமாகிய உலகில் ஆதி, பகவன் இரண்டும் முதலாகவும் கூறியிருப்பது விளக்கமாகும்:—

K. S. Ramasamy Iyer.

---

## குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

பிரம்மஞான ஸபையின் இந்தியன் ஸெக்ஷன் ஆபீஸிலிருந்துவந்த ஓர் நோட்டீஸில், "நாளது வருஷத்திய கட்டணத்தை இன்னும் செலுத்தாமலிருக்கிற மெம்பர்கள், இந்த மார்ச்சு மீ 15உக்குள் செலுத்திவிடவேண்டுமென்றும், அப்படிச் செலுத்தாம லிருப்பவர்களுக்கு பத்திரிகை அனுப்புவது நின்றுவிடுமென்றும்," கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் நமது ஞானோதயம் பெற்றுக்கொண்டுவரும் மெம்பர்கள் தயவுசெய்து மேற்கண்ட விஷயத்தை கவனித்து நடந்துகொள்வார்களென்று நம்புகிறோம்.

சென்ற டிசம்பர் மீ த்தில் கூடிய பிரம்மஞானஸபை இந்தியன் ஸெக்ஷன் கௌன்ஸில் மீட்டிங்கில், பண்டிட். இக்பால் நாராயண குர்ட்டு அவர்கள் இந்தியப் பொதுக் காரியதரிசியாகவும், மிஸஸ் B. பத்மாபாய் ராவ் மகா-ா-ஸ்ரீ T இராமச்சந்திர ராயர் அவர்கள் இவ்விருவரும், இந்தியாவின் வடபாகம் தென்பா

ங்களுக்கு கூட்டுப் பொதுக் காரியதெரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள். தியாஸபி இன் இந்தியா என்ற ஆங்கிலப்பத்திரிகை, இதுவரையில் 3 மாதங்களுக்கோர் முறை வெளிவந்தது, இப்போது மாதாமாதம் வெளியிடப்படுமென்றும் தீர்மானித் திருக்கிறார்கள்.

சென்ற 1925ம் வருஷத்திய இந்தியன் ஸெக்ஷன் ஜெனரல் ஸெக்ரெடரி அவர்களின் ரிபோர்ட்டிலிருந்து, இந்தியாவில், பிரம்மஞானஸபை மெம்பர்களின் ஸங்கியை 6395 என்றும், அதில் அவ்வருஷத்தில் புது மெம்பர்கள் சேர்ந்தது 388 என்றும், கிளைச்சபைகள் 334 என்றும், தெரிகிறது.

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் அவர்கள் ஸ்ரீமான்கள் கிருஷ்ணஜி, D. இராஜகோபாலாச்சாரியார் இவர்களுடன் வட இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். மார்ச்சுமீ 12ந் தேதி வாக்கில் அடையார் வந்து சேருவார்களென்று அறிகிறோம்.

வருகிற எப்ரல்மீ 2ந் தேதிமுதல் 4ந் தேதிமுடிய, அடையாற்றில் தென்னிந்தியாவின் பிரம்மஞானஸபை மஹாநாடு நடைபெறுகிறது. மெம்பர்களும் மற்ற அபிமானிகளும் அவசியம் விஜயம் செய்வார்களென்று நம்புகிறோம்.

வட இந்தியாவில் நாட்டூர் மஹாராஜா சமீபத்தில் காலஞ்சென்றபோது கடைசி நான்கு நாள் மஹாராணி தன் கணவர் சமீபத்தில் இருந்து அவருக்கு வேண்டிய சகல பணிவிடைகளையும் தானே செய்ததுமன்றி பக்தி சிரத்தையுடன் பிரார்த்தனைகள் புரிந்துகொண்டும் கணவர் காதில் மந்திரங்கள் ஜபித்துக்கொண்டும் இருந்தாரென்றும் மரணமான பிறகு அந்தம்மாள் அழவில்லையென்றும் மற்றவர்களும் அழக்கூடாதென்று ஏற்பாடு செய்திருந்ததாகவும் தெரியவருகிறது. இது உயர்ந்த பிரம்மஞானக் கொள்கை. இதை அனுஷ்டிப்பதால் இறந்துபோனவர்களுக்கு நாம் விசேஷ நன்மையை அளிக்கிறோமென்று அறியாதாருமுளரோ?

## பத்திரிகை வரவு.

திருத் தங்கலினின்று 'நம்பாலன்' எனும் ஓர் மாதாந்தர தமிழ் பத்திரிகை எமது பார்வைக்குக் கிடைத்தது. கம்மவார் இனத்தார் தங்களது முன்னேற்றத்தை உத்தேசித்து மற்ற வகுப்பார்களுக்குப் பின்னடையாமல் முன்வந்து பத்திரிகைவாயிலாக வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருப்பதைப் பார்க்க எமக்கு பரமானந்தத்தை யளிக்கிறது. பகவான் அவ்வித முயற்சிகள் ஸபலமாகும்படிச் செய்வாராக. மேலும் அவர்கள் இக்காலப்போக்கை நன்கறிந்து அதற்கிணங்க முயற்சிப்பது அவர்களுடைய கடமையாகும்.

சென்னை - 600 008